**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 1, இதழ் 1, 2020**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம் : http://restpublisher.com/book-series/ctll/**

# இலக்கியங்களில் ஐம்பூதங்கள்

**பெ. இளங்கோ**

தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், இராமாபுரம், சென்னை -600 089

## 1. முன்னுரை

நிலம், நீர், தீ, காற்று(வளி), ஆகாயம்(விசும்பு) இந்த ஐம்பூதங்களின் கலவையே இந்த உலகம். உலகத்தில் உள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்துமே ஐம்பூதங்களின் கலவையே ஆகும். இந்த ஐம்பூதங்களே உயிரனங்கள் அனைத்திற்கு ஆதாரமாக விளங்குகிறது. ஐம்பூதங்களின் இயக்கத்தை உணர்த்து இயற்கையோடு இயைந்து வாழ்கின்றபோது இயற்கையை வசப்படுத்த முடியும். இயற்கையின் இயக்கத்திற்கு மாறாக செயல்படும் போது பேரழிவுகள் ஏற்படும். இதனை உணர்ந்த நம் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சங்க இலக்கியங்களில் ஐம்பூதங்களின் தோற்றம், இயல்புகள், தனித்தன்மைகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. புலவர்கள் ஐம்பூதங்களை மன்னர்களின் வீரம், ஆற்றல், பொறுமை, தனித்தன்மைகளோடு ஒப்பிட்டு பாடல் இயற்றியுள்ளனர். ஐம்பூதங்களின் தனித்தன்மையோடு தலைவனின் சிறப்புகளை தலைவி எடுத்துக் கூறுவதையும் காணமுடிகிறது. இக்கட்டுரையின் வாயிலாக ஐம்பூதங்களின் தோற்றத்தையும் அதன் தனித்தன்மைகளையும் காண்போம். ஐம்பூதங்களின் கலவையே இந்த உலகம். இதே கருத்தை எந்த நவீன அறிவியலும் இல்லாத காலத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட தொல்காப்பிய இலக்கண நூலில் நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்ற ஐந்தும் கலந்த மயக்கமே உலகம் என்கிறது. இதனை,

**“நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**
**திரிவுஇல் சொல்லோடு தழாஅல் வேண்டும்”**

(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா 90)

என்று தொல்காப்பியர் கூறுகிறார். இதற்கு உரையெழுதிய பேராசிரியர் நிலனும் நீயும் நீரும் காற்றும் ஆகாயமுமென்னும் ஐம்பெரும் பூதமும் கலந்த கலவையல்லது உலகமென்பது பிறிதில்லாமையின் என்று விளக்கியுள்ளார். ஐம்பூதங்களின் இயல்புகளை அதன் தன்மைகளை அறிந்த புலவர்கள் ஐம்பூதங்களை மன்னர்களோடு ஒப்பிட்டு பாடல் இயற்றுவதைக் காணமுடிகிறது. புறநானூற்றுப் பாடலில் சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியார் கிழார் ஐம்பூதங்களுக்கு இணையாக ஒப்பிட்டு சேர மன்னனின் பெருமையை பாடுகிறார்.

**“இரு முந்நீர்க் குட்டமும்,**
**வியல் ஞாலத்து அகலமும்,**
**வளிவழங்கு திசையும்,**
**வறிது நிலைஇய காயமும், என்றாங்கு**
**அவை அளந்து அறியினும், அளத்தற் அரியை**
**அறிவும், ஈரமும் பெருங் கண்ணோட்டமும்” (புறநானூறு, பாடல் எண் 20: 1-6)**

என்கிறார் குறுங்கோழியார். பெரிய கடலின் ஆழமும், அகன்ற உலகப்பரப்பும், காற்று இயங்கும் திசையும், நிலைப்பெற்ற ஆகாயமும் இவற்றையெல்லாம் அளந்து அறிந்து கொள்ள இயலும் ஆனால் சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை மன்னனின் அறிவும் அவனது ஈரமும் அளந்தற்கு அரியவை என்று ஆசிரியர் கூறுகிறார்.

சூரிய ஒளியானது பசுமையான இலைகளின் மீது ஒளிர்கையில், அவ்விலைகளிலுள்ள பசுங்கணிகங்களில் ஒளிச்சேர்க்கை என்னும் வேதியல் மாற்றம் ஏற்படுகிறது. அதனால் இலைகள் தங்கள் உணவினைத் தாமே தயாரிக்கின்றன. தாவரங்களில் உள்ள பச்சையங்கள் சூரிய ஒளியை கிரகரித்து தனக்கு தேவையான உணவை தாமே உற்பத்தி செய்கின்றன என்று இன்றைய அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இதே செய்தியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்,

**“சோறுபடுக்குந் தீயோடு**

**செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது**

**பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே” (புறநானூறு, பாடல் எண் 20: 7-9)**

என்று ஒளிச்சேர்க்கைப் பற்றி குறுங்கோழியார் கூறுகிறார். சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை மன்னனை சார்ந்து வாழும் மக்கள் சோறாக்கும் தீயான (ஒளிச்சேர்க்கைக்கு உதவும் சூரிய ஒளியை அதாவது தீயைத் தவிர வேறு தீயை அறியாதவர்கள்), சூரிய வெயிலைத் தவிர இவன் நாட்டு மக்கள் சூடு (தீ) என்பதையே அறியாதவர்களாம். என்று அறிவியல் கருத்தை உள்ளடக்கி தீயின் தன்மையை உவமையாக எடுத்துக் கூறுகிறார்.

மனிதனின் உடம்பு ஐம்பூதங்களால் ஆனது. மனிதன் காமம் மிகுதியால் பிறர் அறியாமல் செய்கின்ற கூடா ஒழுக்கத்தை ஐம்பூதங்கள் அறிந்து அகத்தே சிரிக்கும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

**“வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**

**ஐந்தும் அகத்தே நகும்”** (திருக்குறள் – 271, கூடா ஒழுக்கம்)

என்கிறார் திருவள்ளுவர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேரனையும், சோழனையும், குறுநில மன்னர்களையும் தலையாலங்கானத்தில் தோற்கடித்தான் என்று மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் குறிப்பிடுகிறார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஐம்பூங்களின் தன்மைகளை ஒருங்கே பெற்றவன் என்பதை,

**நீரும், நிலனும், தீயும், வளியும்,**

**மாக விசும்போடு ஐந்து உடன் இயற்றிய**

**மழுவாள் நெடியோன் தலைவன் ஆக,** (மதுரைக் காஞ்சி –அடிகள் 453 – 455)

என்று ஆசிரியர் கூறுகிறார்.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் ஐம்பெரும் பூதங்கள் எவ்வாறு தோன்றின என்பதை,

**“மண்டிணிந்த நிலனும்**

**நிலனேந்திய விசும்பும்**

**விசும்புதைவரு வளியும்**

**வளித்தலைஇய தீயும்**

**தீமுரணிய நீரும் என்றாங்கு**

**ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்**

**போற்றார்ப் பொறுத்தலும் ஆழ்ச்சியது அகலமும்**

**வலியும் தெளலும் அளியும் உடையோய்” (புறநானூறு, பா. எண் 2, அடிகள் 1-8)**

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் கூறுகிறார். ஐம்பெரும் பூதத்தின் இயல்பை போல சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பகைவர்கள் போற்றினால் போற்றுபவராகவும், பகைவர் தவறு செய்தால் அதனை தட்டிக் கேட்பவராகவும், காற்றைப்போல, தீயைப்போல வலிமையும் ஆற்றலும் கொண்டவனாக சேரமன்னன்

விளங்குகிறான் என்று ஐம்பூதங்களை சேரமான் பெருஞ்சோற்று உதயன் சேரலாதன் மன்னனுக்கு உவமையாக கூறுகிறார்.

நிலம், நீர், தீ, வளி இந்த நான்கு பூதங்கள் போன்று விசும்பு (ஆகாயம்) ஆகிய வான்வெளி அனுக்களால் ஆனது அல்ல மற்ற நான்கு பூதங்கள் உருவாக்குவதற்கு மூலமாக இருப்பது விசும்பு என்று ஸ்டீபன் ஹாங்கின்ஸ் கூறுகிறார். இதே செய்தியை சங்க இலக்கியம் ஆற்றல் மிக்க தீயையும் ஆற்றுதற் கினிய காற்றையும் பெற்றெடுத்த விசும்பைப் போல என்கிறது. இதே செய்தியை பரிபாடல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**கருவளர் வானத்து இசையின் தோன்றி**

**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்**

**உந்துவளி கிளர்ந்த ஊழ் ஊழ் ஊழியும்**

**செந்தீ சுடரிய ஊழியும், பனியோடு**

**தண்பெயல் தலைஇய ஊழியும், அவையிற்று**

**உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு**

**மீண்டும் பீடுஉயர்பு ஈண்டி அவற்றிற்கும்**

**உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" (பரிபாடல், பா. 2: 5-12)**

மேற்கண்ட அடிகள் ஐம்பூதங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றம் பெற்றதைக் குறிப்பிடுகின்றன.

உலகத்தில் உயிர்கள் நிலைப்பெற்று இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பது மழை நீரே ஆகும். இதனால் வள்ளுவர் வான்சிறப்பு என்ற அதிகாரத்தின் வாயிலாக நீரின் சிறப்புகளை எடுத்துக் கூறுகிறார். மழை நீரானது உணவு உற்பத்திற்கு ஆதாரமாகவும் அந்த உணவை உண்ணும் உயிர்கள் வாழ்வதற்கு நீரே உணவாகவும் இருக்கிறது என்கிறார். ஆகாயத்தில் இருந்து விழுகின்ற மழை நீரே பூமியில் வாழுகின்ற தாவரங்கள், விலங்குகள் அனைத்திற்கும் ஆதாரமாக விளங்குகிறது. ஆகாயத்தில் இருந்து மழை நீர் விழவில்லையென்றால் பூமியில் பசும்புல் கூட முளைக்காது என்று வள்ளுவர் கூறுகிறார்.

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**

**பசும்புல் தலைகாண் பரிது"** (திருக்குறள் எண் –16)

என்கிறார் திருவள்ளுவர்.

சங்ககாலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் இயற்கையின் சிறப்பை உணர்த்தும் விதமாக மாங்குடி மருதனார் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மன்னனின் சிறப்புகளையும் நாட்டு வளத்தையும் எடுத்துக் கூறுகிறார்.

மழைக்காக மேகங்கள் கடலில் உள்ள நீரை உறிஞ்சி மேகங்களாக மாற்றி வேறு இடத்தில் மழையாக பொழிகிறது. "கடலின் மேல் வீசும் காற்று குளிர்ந்த காற்றாகவும், கடலின் காற்று சற்று வெப்பமாகவும் இருந்தால், கடலில் நீர்த்தாரைகள் எனப்படும் அதிசய நிகழ்வு ஏற்படும்" என்று இன்றைய அறிஞர்கள் கூறுகின்றனர். இந்நிகழ்வை,

***"……குண கடல் கொண்டு குட கடல் முற்றி***
***இரவும் எல்லையும் இளிவு இடன் அறியாது***
***அவலும் மிசையும் நீர்த் திரள்பு ஈண்டி***
***………. …………… …………… …………***
***குணகடற்கு இவர் தரும் குரூஉப் புனல் உந்தி***
***நிவந்து செல் நீத்தம் குளம் கொளச் சாற்றி" (மதுரைக் காஞ்சி, 238-246 )***

மேற்கண்ட பாடலின் வாயிலாக, கீழ்க்கடலில் நீரை மொண்ட மேகமானது, மேற்குத் திசையில் உள்ள மலைகளில் தங்கி,இரவு பகல் எது என்று தெரியாதபடி அடைமழை பெய்து, மேட்டிலும் பள்ளத்திலும் பாய்ந்து, கிழக்குக் கடலை நோக்கி ஓடும். அப்படி ஓடுகின்ற நீரைக் குளங்களில் தேக்கிவைப்பர். என்று கூறுகிறார்.

சங்ககாலத்தில் மதுரை தூங்கா நகராய் விளங்கியதை மாங்குடி மருதனார் மூலம் அறியமுடிகிறது. மதுரை மாநகரில் வணிகர்கள் நாளங்காடி ( பகல் நேரக் கடை) , அல்லங்காடி (இரவு நேரக் கடை) கடைகளில் மக்கள் திரளாக வந்து

பொருள் வாங்குவதால் கடைகளில் பொருள் குறைவதுமில்லை, பெரும் வணிகர்கள் பொருள்களை வந்து விற்பதால் பொருள்கள் மிகுதியாகுவமில்லை என்பதை உவமையாக,

**“மழை கொளக் குறையாது, புனல் புக மிகாது,**
**கரை பொருது இரங்கும் முந்நீர் போலக்**
**கொளக் கொளக் குறையாது தரத் தர மிகாது,**
**கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி**
**ஆடு துவன்று விழவின் நாடு ஆர்த்தன்றே,**
**மாடம் பிறங்கிய மலி புகழ்க் கூடல்;**
**நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை” ( மதுரைக்காஞ்சி 424 – 430)**

என்கிறார் மாங்குடி மருதனார். மழைபெய்வதற்காக கடல் நீரை மேகம் உறிஞ்சுவதால் கடல் வற்றமுமில்லை, ஆற்றுநீர் வந்து கடலில் கலப்பதால் கடல் நீர் அதிகமாவதுமில்லை அதுபோல வணிகர்கள் பொருட்களைக் கொண்டு விற்பதால் பொருட்கள் மிகுதியாமுமில்லை, திரளாக வந்து மக்கள் பொருட்களை வாங்குவதால் பொருட்கள் குறைவதுமில்லையென்று மாங்குடி மருதனார் கூறுகிறார்.

எட்டுத்தொகை அகநானூறு பாடலில் மதுரையாசிரியர் நல்லந்துவனார் அவர்கள் கடலில் இருந்து மேகங்கள் நீரைமுகந்து மழையாக பொழியும் என்று கூறுகிறார்.

**“கடல் முகந்து கொண்ட கமஞ் சூல் மா மழை”**
**……… ……………… …………… ……**
**“நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி” (பாலை – பாடல் எண் – 43)**

மேற்கண்ட அகநானூற்றுப் பாடல் வாயிலாக மேகங்கள் கடல் நீரை முகந்து மழையாக மேகம் இன்னொரு இடத்தில் பொழிகிறது என்ற செய்தியை அறியமுடிகிறது.

## 2. முடிவுரை

ஐம்பூதங்களின் தோற்றம் குறித்தும் ஒவ்வொரு பூதங்களின் இயல்பு, ஆற்றல், தனித்தன்மை குறித்தும் இன்றைய நவீன அறிஞர்கள் பல்வேறு நவீன உபகரணங்களைக்கொண்டு ஆய்வு செய்து அதன் தன்மைகளை சான்றுகளுடன் எடுத்துக் கூறுகின்றனர். எந்த நவீன தடயங்களும் தோன்றாத இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம்முன்னோர்கள் ஐம்பூதங்களின் இயல்பினை உணர்ந்து அதன் இயல்புகளை ஏடுகளில் பதிந்து வைத்துள்ளனர் என்பது வியப்புக்குறியதாகவே உள்ளது. சங்க இலக்கியங்களில் இந்த பேரண்டத்தின் தோற்றத்தைப் பற்றியும் ஐம்பூதங்களின் இயல்பினையும் அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களோடும், வீரத்துடன் செயல்பட்ட வீரர்களின் இயல்போடும், தலைவி தலைவனின் சிறப்புகளை ஐம்பூதங்களின் இயல்போடும் ஒப்பிட்டு பேசுவதாக புலவர்கள் பாடல்களை இயற்றியுள்ளனர் என்பதை மேற்கண்ட சான்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியார் உரை சி.வை. தாமோதரம்பிள்ளை, சென்னை
2. திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை – 600 014
3. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, கோவிலூர் மடாலயம், கோவிலூர் 630307
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, கோவிலூர் மடாலயம், கோவிலூர் 630307